# இன்றைய இறைவார்த்தை

# 22-10-2015

**ஆண்டின் பொதுக்காலம் 29ஆம் வாரம் – வியாழன்**
**முதலாம் ஆண்டு**

**முதல் வாசகம்:**

நீங்கள் பாவத்தினின்று விடுதலை பெற்றுக்
கடவுளுக்கு அடிமைகள் ஆகிவிட்டீர்கள்.

**திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 6 : 19 – 23**

சகோதரர் சகோதரிகளே, நீங்கள் வலுவற்றவர்கள் என்பதை மனதிற்கொண்டு எளிய முறையில் பேசுகிறேன். முன்பு கட்டுப்பாடற்ற வாழ்வுக்கு வழிவகுக்கும் கெட்ட நடத்தைக்கும் நெறிகேட்டிற்கும் உங்கள் உறுப்புகளை நீங்கள் அடிமையாக்கியிருந்தீர்கள். அதுபோல இப்பொழுது தூய வாழ்வுக்கு வழிவகுக்கும் ஏற்புடைய செயல்களுக்கு உங்கள் உறுப்புகளை அடிமையாக்குங்கள். நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாய் இருந்தபோது கடவுளுக்கு ஏற்புடையவற்றைச் செய்யக் கடமைப்பட்டிருக்கவில்லை. அப்போது நீங்கள் செய்த செயல்களை எண்ணி இப்போது நீங்களே வெட்கப் படுகிறீர்கள். அவற்றால் நீங்கள் கண்ட பயன் யாது? அவற்றின் முடிவு சாவு அல்லவா? ஆனால் இப்பொழுது, நீங்கள் பாவத்தினின்று விடுதலை பெற்றுக் கடவுளுக்கு அடிமைகள் ஆகிவிட்டீர்கள். இதனால் நீங்கள் காணும் பயன் தூய வாழ்வு. இதன் முடிவு நிலைவாழ்வு. பாவத்துக்குக் கிடைக்கும் கூலி சாவு. மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள்கொடை நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலைவாழ்வு.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 1 : 1 – 2, 3, 4, 6 (பல்லவி: திபா 40:4a)**
**பல்லவி: ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர்.**

1. நற்பேறு பெற்றவர் யார்? அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர். பாவிகளின் தீயவழி நில்லாதவர். இகழ்வாரின் குழுவினில் அமராதவர். ஆனால், அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர். அவரது சட்டத்தைப் பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர். பல்லவி

2. அவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம் போல் இருப்பார். பருவகாலத்தில் கனி தந்து என்றும் பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார். தாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார். பல்லவி

3. ஆனால், பொல்லார் அப்படி இல்லை. அவர்கள் காற்று அடித்துச் செல்லும் பதரைப் போல் ஆவர். நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார். பொல்லாரின் வழியோ அழிவைத் தரும். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (பிலிப்பியர் 3 : 8, 9)**

அல்லேலூயா, அல்லேலூயா!
கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன்.
கிறிஸ்துவோடு இணைந்திருப்பதற்காகத்தான் நான் இவ்வாறு கருதுகிறேன்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்?
இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன்.

✠ தூய லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 12 : 49 – 53

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: “மண்ணுலகில் தீமூட்ட வந்தேன். அது இப்பொழுதே பற்றி எரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். ஆயினும் நான் பெறவேண்டிய ஒரு திருமுழுக்கு உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறேன். மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, பிளவு உண்டாக்கவே வந்தேன் என உங்களுக்குச் சொல்கிறேன். இதுமுதல் ஒரு வீட்டிலுள்ள ஐவருள் இருவருக்கு எதிராக மூவரும், மூவருக்கு எதிராக இருவரும் பிரிந்திருப்பர். தந்தை மகனுக்கும், மகன் தந்தைக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமியார் தன் மருமகளுக்கும், மருமகள் மாமியாருக்கும் எதிராகப் பிரிந்திருப்பர்.”

கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.

**சிந்தனைக்கு:**

இன்றைய காலக் கட்டத்தில் விதவிதமான நெருப்புகள் நம்மைச் சுற்றி எரிந்து கொண்டிருக்கின்றன. வீட்டைச் சுற்றி பொறாமைத் தீ, வீதியில் சாதித் தீ, நாட்டுக்குள் மதவெறித் தீ, நாடுகளுக்குள் பொருளாதார போட்டித் தீ, உலகில் தீவிரவாதத் தீ, வன்முறைத் தீ, அடக்குமுறைத் தீ, ஆணவத்

தீ. இப்படி பலவித நெருப்புகள் சுவாலை விட்டு எரிந்து உலகை உருக்குலைத்துக் கொண்டிருக்கின்றன. இச்சூழலில் இயேசுவும் ஒரு தீ பற்றி எரிய வேண்டுமென்று விரும்புகிறார். எல்லா நெருப்பும்போல இதுவும் இழப்புகளை பிரிவினையை ஏற்படுத்தக் கூடியது. ஆனாலும் இந்த இழப்பும் பிரிவினையும் ஆக்கப்பூர்வமானது. தனி மனிதனையும் சமுதாயத்தையும் கட்டி எழுப்புவது. வாழ்வில் நிறைவையும் நிம்மதியையும் கொடுப்பது.

இயேசு குறிப்பிடுவது அவர் பெற்ற திருமுழுக்காகும். இறைவனுக்காக அவரது திருவுளத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி வாழத் தீர்மானிப்பதே இத்திருமுழுக்கு. இத்தகைய தீர்மானம் சொந்தம் பந்தம் என்று பார்க்காது. உண்மை, நீதி, அன்பு, இரக்கம், பொது நலன் இவற்றையே முன்னிலைப் படுத்துவதால் உறவுக்குள் பிரிவினைகளுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் வாய்ப்பு அதிகம். நாமும் அதே திருமுழுக்கினைப் பெற்றுள்ளோம். தீமைகளை அழிப்பதிலும் நன்மைகளைச் செய்வதிலும் நெருப்பாக நாம் செயல்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயம். நம்மில் எந்தத் தீ பற்றி எரிகிறது? சிந்திப்போம். செபிப்போம். செயல்படுவோம். ஆசீர்.

**********